TAMIL NADU LEGISLATURE LIBRARY
20 DEC 1982
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1982 மார்ச் 10.

மாசி 26, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''செயற்பாலது தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.''

ஒருவன் வாழ்நாளில் முயற்சிமேற்கொண்டு செய்யத்தக்கது அறம்; செய்யாமல் காத்துக் கொள்ளத் தக்கது பழியே.

1. அறிவிப்பு.

நல்வாழ்வுத் துறை அமைச்சர் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

தமிழ் நாட்டில் குறிப்பிட்ட பகுதிகளில் காலரா நோய் பரவி வருவதாக பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவையின் விதி 54, மற்றும் விதி 55-ன் கீழ் அறிவிப்புகள் கொடுத்துள்ளார் கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கருத்துக் களுக்கு இணங்க மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 106-வது விதியின் கீழ் தமிழ் நாடு பூராவும் உள்ள நிலை குறித்து ஒரு பொது அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : பாயின்ட் ஆப் ஆர்டர். பல உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளில் இந்தக் காலரா நோய் பரவி வருவதைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர் என்று தெரிவித் துள்ளீர்கள். அப்படிப்பட்ட முறையில் எடுத்துக்கொண்டால் அது அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்க உதவிகரமாக இருக்கும். அந்த வாய்ப்பை அவர் களுக்கு அளிக்காமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை அளிப்பது முறையல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியைக் குறிப் பிட்டுக் காட்டிக் கொடுத்துள்ளார்கள். அவற்றை ஒவ்வொரு நாளைக்கு ஒன்று என்று எடுத்துக்கொண்டால் நேரம் அதிகமாகும்

என்பதால், பொதுவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுத்தால் போதுமானது என்று முடிவு செய்யப்பட்டது. வேண்டுமானால், எந்தெந்த உறுப்பினர்கள் அப்படிப்பட்ட தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர் என்று அவர்களின் பெயர்களைப் படித்து விடுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பங்குகொள்கிற வகையில் கவன ஈர்ப்புத் தீர்மானமாக இதை எடுத்துக்கொள்வது தான் முறையாக இருக்கும். இன்று இல்லாவிட்டால், நாளையோ அல்லது அதற்கு மறுநாளோ அதை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டது மாதிரி அதை கவனஈர்ப்புத் தீர்மான மாக எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால் விவரமான முறையில் பதில் கொடுக்கமுடியும். ஆனால் நாளைய தினம் ஹெல்த் டிமாண்ட் இருப்பதால் அதை ஒரு அறிக்கையாக இன்றைக்கே வைத்து விட்டால் நன்றாக இருக் கும் என்று தான் பேரவைத் தலைவர் அவர்கள் இந்த முறை யைப் பரிந்துரைத்தார்கள். பேரவைத் தலைவர் என்ன சொல் கிறாரோ அதை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். நாளையோ அல்லது அதற்கு மறுநாளோ அதை எடுத்துக்கொள்வதில் எனக்கு ஒன்றும் பிரச்னை இல்லை. பேரவைத் தலைவர் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ : நாளைக் காலை அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளலாம். அது குறித்து அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கை, அந்த கவனஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படுகிற வரையில் 'கான்பிடன்சியலாக' இருக்க வேண்டும்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் நடைபெற்ற கலவரம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். சிவராமன், மு. அப்பாதுரை, நா. சுந்தரராஜ், இல. பலராமன், ப. பொன்னுரங்கம், கு. பா. பழனியப்பன், த. ஆறுமுகம், ப. சுந்தரம், பாபு ஜனார்த்தனன், த. வேணு கோபால், ஏ. டி. குலசேகர், என். எஸ். வி. சித்தன், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், எஸ். என். இராமசாமி, இ. முத்துராமலிங்கம், ஏ. சாகுல் ஹமீது, சோ. அழகர்சாமி, மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன்,